வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண். 2775/ஆ2/2024 நாள் .06.2024

பொருள் : பள்ளிக் கல்வி – யோகா பயிற்சி – வேலூர் மாவட்டம் அரசு/அரசு நிதியுதவி பள்ளியில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு இலவசமாக மனவளக்கலை யோகா பயிற்சி அளித்தல் – தகவல் தெரிவித்தல் – சார்பாக

பார்வை :
1. உலக சமுதாய சேவா சங்கம் கடிதம் நாள்.22.05.2024
2. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.1136/2024 நாள்.05.06.2024

---

பார்வை 1இல் காணும் கடிதம் மூலம் வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/அரசு நிதியுதவி பள்ளியில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு மேற்படி உலக சமுதாய சேவா சங்கம் நடத்தும் மனவளக்கலை யோகா பயிற்சி மூலம் அறிவாட்சித்திறன், உடல் திறன், மன ஆரோக்கியம் , ஒழுக்க பண்பாடு மற்றும் கல்வியில் சிறந்த விளங்க அறிவு கூர்மை மற்றும் நினைவாற்றல் பயிற்சி அளிப்பதன் மூலம் தேர்ச்சி விதிதத்தை அதிகரிக்க முடியும்.

மேற்படி அமைப்பினருடன் இணைந்து அரசு/அரசு நிதியுதவி பள்ளிகளில் மேற்கண்ட மாணவர்களுக்கு இலவசமாக யோகமும் இளைஞர் வல்லமையும் மனவளக்கலை யோகா பயிற்சியை தினமும் மாலை நேரத்தில் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், முதற்கட்டமாக இணைப்பில் கண்ட பள்ளிகளுக்கு யோகா அமைப்பு ஒருங்கிணைப்பாளர் உடன் ஒத்துழைப்பு நல்கி யோகா பயிற்சி நடத்த அனைத்து தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :
பள்ளியின் பெயர் பட்டியல் மற்றும்
ஒருங்கிணைப்பாளர் விவரம்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமையாசிரியர்கள்,
அரசு /நகராட்சி/ நிதியுதவி / உயர்/மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்,
வேலூர், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்படுகிறது.